முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் புதன்கிழமை

**E.A.No.6/2025**
**in**
**E.P.No.3/2016**
**in**
**O.S.No.477/2013**

1. கரிவலம்வந்தநல்லூர் பிள்ளைமார்கள்
பொது மகமை சங்கம் ( பதிவு எண்.3/2013)
அதன் தலைவர் பெ.சுப்பையா பிள்ளை (இறந்தவர்) ... 1ம் மனுதாரர்/1ம் வாதி

2. கரிவலம்வந்தநல்லூர் பிள்ளைமார்கள்
பொது மகமை சங்கம் ( பதிவு எண்.3/2013)
அதன் செயலர் பா.முருகன் அவர்கள் மூலம் ... 2ம் மனுதாரர்/2ம் வாதி

3. கரிவலம்வந்தநல்லூர் பிள்ளைமார்கள்
பொது மகமை சங்கம் ( பதிவு எண்.3/2013)
அதன் தலைவர் கோபால் பிள்ளை ... 3ம் மனுதாரர்/உத்தேச 3ம் மனுதாரர்/சங்க தற்போதைய தலைவர்

**/எதிர்/**

1. கணபதியாபிள்ளை (இறந்தவர்) ... 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி
2. சுப்புலட்சுமி
3. பாலசுப்பிரணியன்
4. ரவிச்சந்திரன்
5. கணேசன்
6. சீதாலட்சுமி
7. மாதவன் (மூளை வளர்ச்சியற்றவர்)
(மேற்படி மூளை வளர்ச்சியற்ற 7ம் எதிர்மனுதாரருக்கு
நீதிமன்ற காப்பாளர் திரு.R.காளிராஜ், கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் மூலம்)

... 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் /
இறந்துபோன 1ம் எதிர்மனுதாரின் வாரிசுகள்

இம்மனுவானது 30.10.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.19 16:56:49 +0530

வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2 முதல் 4 மற்றும் 6வது எதிர்மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற காப்பாளராக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.காளிராஜ் அவர்கள் ஆஜராகியும், 5, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1, விதி 10(2) மற்றும் பிரிவு 151ன்படி, E.P.No.3/2016 மனுவில் மனுதாரர்களின் அமைப்பில் தலைவராக செயல்பட்டு வந்த 1ம் மனுதாரர் 04.02.2025 தேதியில் இறந்துவிட்டதால், அவருக்கு பதிலாக மனுதாரர்கள் சங்கத்தில் புதிதாக தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகம் செய்து வரும் 3ம் மனுதாரரை E.P.No.3/2016 மனுவில் புதிதாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–

இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை நிறைவேற்றி வாடகைதாரரான 1ம் எதிர்மனுதாரரை மனு சொத்திலிருந்து காலி செய்ய E.P.No.3/2016 நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து, நிலுவையில் இருக்கும்போது 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு வாரிசுகள் சேர்த்து விசாரணையில் இருந்து வருகையில், 1ம் மனுதாரரான சங்கத்தின் தலைவர் 04.02.2025 தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்துபோன 1ம் மனுதாரரின் ஸ்தானத்தில், தற்போது மனுதாரர்கள் சங்கத்தில் 3ம் மனுதாரர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருவதால்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.19 16:56:57 +0530

E.P.No.3/2016 மனுவில் மேற்படி சங்கத்தின் தலைவர் என்ற நிலையில் 3ம் மனுதாரரை கட்சி சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், E.P.No.3/2016 மனுவின் சொத்து மனுதாரர்கள் அமைப்பிற்கு பாத்தியப்பட்டதாகும் என்றும், இறந்துபோன 1ம் மனுதாரர் இடத்தில் புதிதாக தலைவர் என்ற ஸ்தானத்தில் 3ம் மனுதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், 3ம் மனுதாரரை E.P.No.3/2016 மனுவில் கட்சி சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், 3ம் மனுதாரரை E.P.No.3/2016 மனுவில் கட்சி சேர்த்துக் கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், ஆகையால் E.P.No.3/2016 மனுவில் மனுதாரர்களின் அமைப்பில் தலைவராக செயல்பட்டு வந்த 1ம் மனுதாரர் 04.02.2025 தேதியில் இறந்துவிட்டதால், அவருக்கு பதிலாக மனுதாரர்கள் சங்கத்தில் புதிதாக தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகம் செய்து வரும் 3ம் மனுதாரரை E.P.No.3/2016 மனுவில் புதிதாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் 5, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என கற்றறிந்த வழக்கறிஞர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **தீர்வுக்குரிய பிரச்சனை:-**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது E.P.No.3/2016 மனுவில் மனுதாரர்களின் அமைப்பில் தலைவராக செயல்பட்டு வந்த 1ம் மனுதாரர் 04.02.2025 தேதியில் இறந்துவிட்டதால், அவருக்கு பதிலாக மனுதாரர்கள் சங்கத்தில் புதிதாக தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகம் செய்து வரும் 3ம் மனுதாரரை E.P.No.3/2016 மனுவில் புதிதாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.19 16:57:03 +0530

6) மனுதாரர்களால் இம்மனுவில் 1ம் மனுதாரரான சங்கத்தின் தலைவர் 04.02.2025 தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்துபோன 1ம் மனுதாரரின் ஸ்தானத்தில், தற்போது மனுதாரர்கள் சங்கத்தில் 3ம் மனுதாரர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், E.P.No.3/2016 மனுவில் மேற்படி சங்கத்தின் தலைவர் என்ற நிலையில் 3ம் மனுதாரரை கட்சி சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், E.P.No.3/2016 மனுவின் சொத்து மனுதாரர்கள் அமைப்பிற்கு பாத்தியப்பட்டதாகும் என்றும், இறந்துபோன 1ம் மனுதாரர் இடத்தில் புதிதாக தலைவர் என்ற ஸ்தானத்தில் 3ம் மனுதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், 3ம் மனுதாரரை E.P.No.3/2016 மனுவில் கட்சி சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

7) E.P.No.3/2016 மனுவின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்புக்கும், இவ்வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முற்றிலுமாக தீர்க்கவும், மேலும் தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும், இம்மனுவின் சங்கத்தின் தலைவராக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 3ம் மனுதாரரை E.P.No.3/2016 மனுவில் கூடுதல் 3ம் மனுதாரராக கட்சி சேர்க்க வேண்டியது அவசியமானது ஆகும்.

8) மேலும், 3ம் மனுதாரரை E.P.No.3/2016 மனுவில் கூடுதல் 3ம் மனுதாரராக கட்சி சேர்ப்பதால் E.P.No.3/2016 மனுவின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படபோவதில்லை. மேலும், இம்மனுவின் 5, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என கற்றறிந்த வழக்கறிஞர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

9) எனவே, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு, இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தில் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.11.19 16:57:10 +0530

10) **இறுதியாக:—**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.11.19 16:57:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :—**

— இல்லை —

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.11.19 16:57:22 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.6/2025
in
E.P.No.3/2016
in
O.S.No.477/2013
உத்தரவு (Draft / Fair)
நாள் : 19.11.2025